## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### மூன்றாம் வருட/இரண்டாம் ஆரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (மார்ச்/ஏப்ரல் 2015)

LIBRARY
EASTERN UNIVERSITY
01 JUN 2015

# GEOS 3201 நகரப்புவியியல்
## Urban Geography

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**யாதாயினும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**
**எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.**

---

01.(i) நகரம், நகராக்கம் ஆகிய பதங்களை வரையறை செய்க.
(03 புள்ளிகள்)

(ii) நகரப் புவியியலின் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விபரிக்குக.
(05 புள்ளிகள்)

(iii) ஆரம்பகால நகரங்களில் இருந்து இன்றுவரை தொழிற்பாட்டு ரீதியாக நகரங்கள் எவ்வாறு மாற்றமடைந்து வந்துள்ளன என விபரிக்குக.
(17 புள்ளிகள்)

02.(i) உலக நகரங்களின் நகராக்கப் போக்குகள் கால அடிப்படையில் மாறுபட்ட பாங்கினை வெளிப்படுத்தி வருகின்றன. இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.
(10 புள்ளிகள்)

(ii) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அதிகரித்து வரும் நகராக்கப் பிரச்சினைகளை குறைப்பதற்கான வழிமுறைகளை ஆராய்க.
(15 புள்ளிகள்)

03.(i) முதன்மை நகரம் என்பதனை வரையறை செய்வதுடன் அதன் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளை விபரிக்குக.
(08 புள்ளிகள்)

(ii) முதன்மை நகரங்களின் வளர்ச்சி காணப்படும் நாடுகள் எதிர்நோக்கும் சாதக பாதக தன்மைகளை உதாரணங்களுடன் ஆராய்க.
(17 புள்ளிகள்)

04. இலங்கையில் நகராக்க நடவடிக்கைகள் மிக மெதுவான வேகத்தில் நிகழ்வதற்கு அடிப்படையான காரணிகளையும் அவற்றின் விளைவுகளையும் பொருத்தமான உதாரணங்களுடன் தர்க்க ரீதியில் ஆராய்க.

(25 புள்ளிகள்)

05. நகர உருவவியற் கோட்பாடுகளில் ஹோமர் ஹெய்ட் (Homer Hoyt)மற்றும் ஹரிஸ் மற்றும் உல்மான் (Harris & Ulman) ஆகியோரது கருத்துக்களின் முக்கியத்துவத்தினையும் அவற்றின் பொருத்தப்பாட்டினையும் பரிசீலிக்குக.

(25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்கு விளக்கக் குறிப்புரை வழங்குக.

(i) நகர வறுமை

(ii) மத்திய வர்த்தக மாவட்டம்

(iii)நகரப் போக்குவரத்து பிரச்சினைகள்

(12½ x 2 புள்ளிகள்)

*****